## 4.26 பூமாலை வணிக வளாகம்–சென்னை வள்ளுவர் கோட்டத்தில் அமைய இருக்கின்ற பூமாலை வணிக வளாகத்திற்கு மாதிரி திட்ட வரைபடங்கள் தேர்வு செய்யப்பட்டு அரசு ஒப்புதல்

ஊரக வளர்ச்சி (எஸ்.ஜி.எஸ். ஒய்) துறை

அரசாணை (1 டி) எண். 482 நாள் : 7.9.2000

படிக்க :

1. அரசாணை (நிலை) எண். 137. ஊரக வளர்ச்சித் துறை நாள் 25.5.2000
2. அரசாணை (நிலை) எண். 302. வருவாய்த் துறை நாள் 12.6.2000
3. அரசாணை (நிலை) எண். 192. ஊரக வளர்ச்சித் துறை நாள் 19.7.2000
4. ஊரக வளர்ச்சி இயக்குநர் நே.மு.கடித எண்.48217/எஸ்.ஜி.எஸ். ஒய்/2000 நாள் 5.8.2000

**ஆணை**

பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்பு சிறப்புத் திட்டத்தின் கீழ் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் அமைய இருக்கின்ற **'பூமாலை'** வணிக வளாகத்தில் இரண்டு தனியார் வரைவாளர்களால் உருவாக்கிய மாதிரித் திட்ட வரைபடங்களை தேர்வு செய்வதற்காக ஊரக வளர்ச்சி இயக்குநர் அரசுக்கு அனுப்பியுள்ளார்.

2. இரண்டு திட்ட வரைபடங்களும் பார்வையிடப்பட்டன. கொடி (இ) ல் உள்ள மாயா மற்றும் மனோஜ் நிறுவனத்தின் 15.7.2000 தேதியிட்ட **'பூமாலை'** வணிக வளாக திட்ட வரைபடம் **(Sketch)** தேர்வு யெசய்யப்பட்டு அரசு ஒப்புதல் வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

3. இதற்கென முன்னமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி ஆதாரங்களை வைத்து மட்டும், இதனை செயல்படுத்துமாறும், தற்போதுள்ள வள்ளுவர்கோட்ட அமைப்பிற்கும், சூழலுக்கும், இதன் தோற்றத்திற்கும் எந்த வகையிலும் பாதிப்புகள் ஏற்படாமல் **'பூமாலை'** வணிக வளாகம் அமைப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக செயல்படுத்துமாறு ஊரக வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. இவ்வாணை நிதித் துறை அ.சா.கு.எண். 2711/FS/P/2000 23.8.2000 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**

அரசு செயலாளர்